உ
சிவமயம்



சிவபூமி என்று அழைக்கப்படுகின்ற ஈழமணித் திருநாட்டில் யாழ்ப்பாணத்து மாவட்டத்து
ஏழாலையை ஜெனனப் பதியாகக் கொண்டு ஜேர்மனி நாட்டில் வசித்து வந்த

அமரர்

## திரு வேலுப்பிள்ளை நடராசா

### அவர்கள் அமரத்துவம் அடைந்தமை குறித்த

# நினைவு மலர்

## 03-12-2005


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

உன் மடியில் தவழ்ந்தோம்
உறவாக இருந்து
மாறாத சொந்தத்தை
மலை போல் கொடுத்தாய்
சுமைதாங்கி போல் சுமந்தாய்
தீராத சோகத்தை தீர்த்திடவே
முடியலேயே
ஆறாது காய மது ஆற்றிடநீ
வந்துவிடு
வையத்துள் நீ செய்த மாறாத
தியாகங்கள்
மாறாது மாறாது ஆனந்த
யோதியே
அற்புத அகல்விளக்கே உங்களுக்கு
எமது காவிய சமர்ப்பணம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் வணக்கம்

சித்தி விநாயகரே வாரும் – என்றும்
தீராத வினைகளைத் தீரும்
பக்தியாய்ப் பரவினோம் பாரும் – உமது
பாதார விந்தமருள் தாரும்

தாய் தந்தையானவரும் நீரே – மற்றும்
தாரந் தமருமெல்லாம் நீரே
நோயைத் தருபவரும் நீரே – தந்த
நோய்க்கு மருந்தானவரும் நீரே

பஞ்சபூத மானவரும் நீரே – பொல்லா
பஞ்சப்புலன் தந்தவரும் நீரே
வஞ்சப்புலன் அடக்கியருள்வீரே – எமக்கு
தஞ்சமுமை யல்லால் கதியாரே

ஐந்துகரத் தானை முகத்தீரே – அண்ணல்
ஆறுமுகனுக் கண்ணனான நீரே
வந்திப்பவர்க் கின்னருள் செய்வீரே – அம்மை
வள்ளியை தம்பிக்களித்தீரே

நீர் நொச்சித் தாழ்விலுறைவீரே – எமக்கு
நீடு புகழ்ச் செல்வம் தருவீரே
சேருமடியார்க் கருளுவீரே – உமது
சேயர் துதிப்பாட்டில் மகிழ்வீரே

அழுக்கறவா வெகுளி போக்கி – பேர்
அன்பும் அறனும் எமதாக்கி
விழுப் பொருளே! மனசைச் செம்மையாக்கி – அதில்
வீற்றிருப்பீர் முன்னை வினை போக்கி

பொய்மை பேசாதிருக்க வரந்தாரும் – என்றும்
புறங்கூறா நேர்மையினைத் தாரும்
தெய்வமுமைத் துதிக்கவருள் தாரும் – என்றும்
தித்திக்கும் பேரின்பந்தாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் திரு. வேலுப்பிள்ளை நடராசா
## அவர்கள்

அன்னையின்
மடியில்

13
-
04
-
1937



ஆண்டவன்
அரவணைப்பில்

24
-
10
-
2005

## அமரர் திரு. வேலுப்பிள்ளை நடராசா
### அவர்களது

## திதி வெண்பா

மன்னாமெழில் பார்தீபம் மாதமுயர் ஐப்பசிஎட்டாம் நாள்
பொன்னொளி சோமவாரம் அபரபக்ஷ அஷ்டமி
திதி தனில் பார் புகழ் நடராசா மன்னுபவம்
தீர்த்து இறை பதம் அடைந்தான் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்

## தேவாரம்

மானினேர் விழி மாதராய் வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல் வாயொரு பாலன் ஈகிவன் என்றுநீபரி வெய்திடேல்
ஆனை மாமலை யாதியாய இடங்களிற் பல அல்லல் சேர்
ஈனர் கட்கெளியேன லேன்திரு ஆலவாயரன் நிற்கவே.

## திருவாசகம்

பாருரு வாய பிறப்பற வேண்டும் பத்தியையும் பெறவேன்
சீருரு வாய சிவபெருமானே செங்கமலம் மலர் போல்
ஆருரு வாய என்ஆர முதே உன் அடியவர் தொகைநடுவே
ஓருரு வாய நின் திருவருள் காட்டி என்னையும் உய்யக் கொண்டருளே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீரும்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை மணவாளனுட்காட்
பாரும் விசும்பும் அறியும்பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

அண்ணலே யெனை யாண்டுகொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள் புரிவே தனாயகனே
கண்ணிநான் திருக் கயிலையிலிருந்த நின்கோலம்
தன்னிநான் தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.

## திருப்புகழ்

இருந்த வீடும் கொஞ்சிய சிறவரும் விறுகோளும்
இசைந்த ஊரும் பெண்டிரும் இளமையும் வளமேவு
விரிந்த நாடும் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்குதீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தில் ஏறும் கொண்டலின் வடிவின் மருகோனே
குரங்குலாவும் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதம் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்தகாலுந் தண்டையும் அழகிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவாநெறி யளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

**மாணிக்கவாசக சுவாமிகள்**

**அருளிச்செய்த சிவபுராணம்**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈசனடிபோற்றி எந்தையடி போற்றி
தேசனடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண் இறந்து எல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுஇறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்க வென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ சக மேழு மளித்
துண்டா னுறங்க வொளித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலா வல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவைதோய்தர நற்கவியும்
பாடும் பணியிற் யணித்தருள்வாய் பங்கயாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக்குன்றுமைப்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே சகல கலா வல்லியே

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுதார்த் துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கலோ வுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்குப் பனுவற் புலவோர் கவிமழை சித்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல கலா வல்லியே

தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலா வல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்பாத பங்கேருகமென்
நெஞ்சத் தடத் தலராத தென்னே நெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந்நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழு தெளிதெய்த நல்கா யெழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனு மென்பாற்
கூட்டும்படி நின் கடைக்கணங்கா யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோ திமப்பேடே சகல கலா வல்லியே

சொல் விற்பனமு மவதானமுங் கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய் நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென்றொரு காலமுஞ் சிதையாமை நல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலா வல்லியே

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலத் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்றுகும் பதாம்புயத் தாளே சகல கலா வல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலா வல்லியே

தாய் தன் உடலினின்று பாலை உண்டு பண்ணித் தன் குழந்தைக்கு ஊட்டுகின்றாள். குழந்தையின் பொருட்டுத் தான் பத்தியம் இருக்கிறாள். ஊண் உறக்கத்தை ஒழிக்கிறாள். பசு தன் கன்றுக்கும் உலகிற்கும் பாலைத் தன் உடலிலிருந்து உண்டு பண்ணிக் கொடுக்கிறது. இவ்விரண்டும் சுயநலம் கருதாத கர்மத்திற்கு நல்ல சான்றுகளாகின்றன. தியாகத்தின் உச்ச நிலையை ஆங்குக் காணலாம். தவத்துக்கு விளக்கமும் அச்செயல்களில் அடங்கி யிருக்கிறது. பின்பு அதற்கு நிகரான தானத்தை வேறு எங்கும் காண முடியாது.

*— சுவாமி சித்பவானந்தர் —*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்

**கந்தர் சஷ்டிகவசம்குறள் வெண்பா**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல் வினைபோம் துன்பம்போம்
நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் —
கதித்து ஓங்கும் நிஷ்டையும் கைகூடும் நிமலர்
அருள் கந்தர் சஷ்டி கவசந்தனை.

**நிலை மண்டில் ஆசிரியப்பா**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மையல் நடஞ்செயும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென்று உவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம!
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டு ஆயுதம் பாசாங் குசமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக்காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவ குகன் தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற் சீராவும்
இருதொடை அழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நககென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேர்இள முலை மார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வடிவேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடிஇணை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க!
நாவில் சரஸ்வதி நல்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தர் சஷ்டி கவசம்-தொடர் 3

அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியினில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியேனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவை களுடனே பல கலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதர் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டு உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்!
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அதுஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியம் இனித்தொடாது ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கம் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல் விப்பிருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கு அருள்வாய்!
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா(க)
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சைலொளி பவனே!
திரிபுர பவனே திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடும்பனை அழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர்காமத்து உறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமரா!
ஆவினன்குடி வாழ் அழகிய வேலா!
செந்தில் மாமலை உறும் செங்கல்வ ராயா!
சமராபுரி வாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான்உனைப் பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க!
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவள் நீ குரு! பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளை என்தன் பாய்ப் பிரியமளித்து
மைந்தன் என் மீதுன் மனமகிழ்ந் தருளியத்
தஞ்சம் என் அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகி
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்தி ஆறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்த்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாத வரைப் பொடிப்பொடி ஆக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்து உனதுள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து ணவாகச்
சூரபத் மாவைத் துணித்த கையதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத்த ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி! கந்தா போற்றி!
வெற்றி புனையும் வேலே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டும் இங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக்கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய் 3

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லோரும் வந்தாரோ?
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவெம்பாவை–தொடர் 1

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலமிடினு முணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு உன்வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றேவாய் திறப்பாய்
தென்னா என்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென்றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப் பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடி யார்தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையுமிலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆர் அயலார்
ஏதவனைப்பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கைபுக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழற்போற்
செய்யா, வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெட நாமார்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனை நீராடலோ ரெம்பாவாய். 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சாரதலினால்
எங்கள் பிராட்டியும் எங்கேனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய் 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைதான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தா
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத்திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னைப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய் 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய் 17

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கி த்தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி மித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய் 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று ரைப்போம்கோள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லாதோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கலோ ரெம்பாவாய் 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி யெல்லா வுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லா வுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லா வுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால்நான் முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம்உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம்மார்கழி நீராடேலோ ரெம்பாவாய் 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப் பதிகம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு வால வாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால் வாயன் திருநீறே.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயன் திருநீறே.

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கொடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயன் திருநீறே.

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயன் திருநீறே.

எயிலது வட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்(து) ஆல வாயான் திருநீறே.

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்க நிவாரண அட்டகம்

மங்கள் ரூபினி மதியணி சூலினி மன்மத பாணியலே
சங்கடம் நீங்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி செளந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல் கற்ப காமினியே
ஜெயஜெய சங்கரி கெளரி க்ருபாகரி துர்க்க நிவாரணி காமாச்சி

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி மதியொளி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவ மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜெயஜெய சங்கரி கெளரி க்ருபாகரி துர்க்க நிவாரணி காமாச்சி

சங்கரி செளந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே
எங்குலந் தழைத்திட எழில் வடிவுடனே எழுந்தநல் துர்கையளே
ஜெயஜெய சங்கரி கெளரி க்ருபாகரி துர்க்க நிவாரணி காமாச்சி

தனதன தந்தண தவிலொலி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக் கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறையொலி கூவிடப் பண்மணி நீ வருவாய்
ஜெயஜெய சங்கரி கெளரி க்ருபாகரி துர்க்க நிவாரணி காமாச்சி

பஞ்சமி பைரவி பர்வத புத்திர பஞ்சகல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக் கொடுத்தநல் குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற் சக்தியெனும் மாயே
ஜெயஜெய சங்கரி கெளரி க்ருபாகரி துர்க்க நிவாரணி காமாச்சி

எண்ணிய படிநீ யருளிட வருவாய் எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே
ஜெயஜெய சங்கரி கெளரி க்ருபாகரி துர்க்க நிவாரணி காமாச்சி

இடர்தரும் தொல்லை இனிமேல் இல்லை யென்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரும் அமுதே சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜெயஜெய சங்கரி கெளரி க்ருபாகரி துர்க்க நிவாரணி காமாச்சி

ஜெயஜெய பாலா சாமுண்டேஸ்வரி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய துர்க்கா சிறீபரமேஸ்வரி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளி ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய சங்கரி கெளரி க்ருபாகரி துர்க்க நிவாரணி காமாச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் உயர்திரு. வேலுப்பிள்ளை நடராசா அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து மா கடலின் மத்தியில் திலகம் போல் விளங்கும் நம் ஈழத் திருநாடு. இந்நாட்டின் சிகரம் போல் விளங்கும் யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்திலே புகழ்பூத்த பற்பல கிராமங்கள் உண்டு. அவற்றுள் நீர்வளம், நிலவளம் ஒருங்கே அமைந்த ஏழாலைக் கிராமமும் ஒன்று. ஏழு ஆலயங்கள் ஓர் இடத்தே ஒருங்கே அமைக்கப் பட்டமையால் ஏழாலை என்ற காரணப் பெயரை இக் கிராமம் பெற்றது. இக் கிராமத்தின் மேற்குத் திசையில் அதாவது ஏழாலை மேற்கில் புகழ் பூத்த சைவ வேளாள குல திலகமாக வர்த்தகர் திரு. வேலுப்பிள்ளை அவர்கள் வாழ்ந்தார். இவர் அவ்வூரிலுள்ள சிவகாமிப்பிள்ளை என்னும் பெண்ணை திருமணஞ் செய்து சீருஞ் சிறப்பும், பேரும் புகழுமோடு வாழ்ந்தார். இவர்களின் இனிய இல்லற வாழ்க்கையின் பயனாக அமரர் நடராசா அவர்கள் (13-04-1937) இல் அவதரித்தார்.

பள்ளிப் பருவமானதும் பிறந்த வீட்டிற்கு மிக அண்மையிலுள்ள ஏழாலை மகா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தார். தொடர்ந்து இவ்வித்தியாலயத்திலேயே உயர் கல்வி யையும் கற்று சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையிலே தோற்றி சித்தியடைந்தார். பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் ஆசிரியர்களினதும், அதிபர்களினதும் பாராட்டைப் பெற்று மாணவத் தலைவன் என்ற பதவியைப் பெற்றார். சக மாணவர்களோடு அன்பாக நடந்தும், ஆசிரியர்களுக்கு கீழ்ப்படிந்து நடந்தும் பாடசாலைச் சமூகத்திடம் நன் மதிப்பைப் பெற்றார். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்". "தந்தை தாய் பேண்" என்ற ஒளவையாரின் வாக்குக்கமையப் பெற்றோரைத் தெய்வம் போல் நேசித்து அவர்களுக்கு வேண்டியவை எல்லாம் செய்து வாழ்ந்தார். மாதா, பிதா, குரு மூவரையும் தெய்வமாகவே மதித்தார். இவர் கல்வி பயிலும் காலத்தில் ஏனைய பாடங்களைப் போன்று கலையிலும் மிக ஆர்வமுள்ளவராக இருந்தார். அக்காலத்து இவர் கல்வி கற்ற ஏழாலை மகாவித்தியாலயத்தில் சங்கீத, நடன ஆசிரியராகவிருந்த திரு. நல்லையா அவர்களிடம் கோலாட்டம், காவடி ஆகிய கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கற்று அகில இலங்கைக் கலைப் போட்டியில் எலிசபெத் மகாராணியின் விருதைப் பெற்றார்.

அவரின் குணாதிசயங்களுக் கேற்ப கிராம சேவையாளர் தேர்வுப் பரீட்சையில் சித்தி பெற்று, கிராம சேவையாளர் என்ற பதவியை 1963 ஆம் ஆண்டு பெற்றார். மணப்பருவமானதும் ஏழாலை வடக்கைச் சேர்ந்த பொன்னையா செல்லமுத்து தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியாகிய இராசமணி என்னும் பெண்ணை 1964 ஆம் ஆண்டு திருமணஞ் செய்து கொண்டார். இவர் ஓர் முருக பக்தர். ஆகையினால் அவரது திருமணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

“என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற தாரக மந்திரத்திற்கேற்ப அமரர் அவர்கள் கிராம சேவையாளர் பதவிக் கேற்றாப் போல் சமூகத்திற்களப்பரிய சேவைகள் ஆற்றினார். அவர் தம் சேவையை முறையே கட்டுவன், மாவிட்டபுரம், புன்னாலைக் கட்டுவன், சுன்னாகம், மயிலிட்டி, இளவாலை, ஏழாலை ஆகிய கிராம மக்களுக்காற்றினார். கிராம மக்களின் பிரச்சனைகளை தாழ்மையான அறிவுரைகள் மூலம் தீர்த்து வைப்பார். அவர் சேவையாற்றிய கிராம மக்கள் கோடு ஏறி வழக்குப் பேசியதே கிடையாது. எல்லாப் பிரச்சனைகளையும் தானே முன்னின்று தீர்த்து வைப்பார். ஏழை மக்களுக்கெல்லாம் தன்னால் இயன்ற உதவிகள் புரிந்தார். கிராம மக்களுக்கெல்லாம் ஆலோசனை, அறிவுரைகள் கூறி மக்களின் மனதில் அழியாச் சின்னமாக விளங்கினார்.

சமூகப் பணிகளோடு சமயப் பணிகளும் புரிந்து மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளார். அவர் ஓர் இறை பக்தர். பிறந்த வீட்டிற்கு அண்மையிலுள்ள அம்மன் ஆலயம் சென்று தினந்தோறும் வழிபடுவார். அம்மன் அருளால் அவருக்கு நேர்ந்த துன்பங்க ளெல்லாம் அகன்றதெனலாம். அத்தோடு இவரோர் முருக பக்தனுமாவார். கந்த புராணம், கந்த சஷ்டி கவசம் என்பன தவறாது ஓதுவார். விரதங்களையும் தவறாது அனுஷ்டிப்பார். மாவைக் கந்தனின் வருடாந்த உற்சவ காலங்களின் போது தேர்த் திருவிழாவிலன்று தவறாது காவடி எடுத்து கந்தனின் கருணை பெற்றார். மாவைக் கந்தனின் அன்றைய பிரதம குருக்கள் சிவசிறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரைச்சாமிக் குருக்கள் முதல் அவர் மூத்த மகன் சண்முகநாதக் குருக்கள் ஈறாக வழிவந்த அனைத்து குருக்கள்மாரிடமும் பக்தி உடையவராகவும் பிரியமானவராகவும் இருந்தார். செல்வச் சந்நிதி முருகன், மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆகிய ஆலயங்களைத் தரிசிக்கவும் தவறமாட்டார். சந்நிதி முருகன் ஆலய நீரோடையில் நீராடி அவருடைய நோய் குணமாகியபடியால் சந்நிதியானிடம் மிகுந்த பற்றுள்ளவராகக் காணப்பட்டார். தான் புகுந்த இடமாகிய ஏழாலை வடக்கில் அமைந்துள்ள விநாயகப் பெருமானிலும் மிகுந்த ஈடுபாடுடையவர்.

இவ்வாறு உறுதியான உடலும், இனிய உள்ளமும், இனிய சொல்லும், வள்ளலுமாய் வளமாக வாழ்ந்த பொழுது தான் பிறந்த தாய் நாட்டின் நிலை காரணமாகப் புலம் பெயர்ந்து குடும்பத்தோடு அவர் ஜேர்மனியில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. அங்கு வாழுங்கால் அவருக்கு மிக ஆபத்தான நோய் ஏற்பட்டது. இருந்தும் அந்நோய் அவர் செய்த புண்ணியத்தாலும், அவர் வழிபட்ட தெய்வ அருளாலும் குணமான தெனலாம். நோய் குணமாகி தன் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரக் குழந்தைகளோடு மகிழ்ச்சியாக வாழ்ந்தார். இவர் இப்படி வாழும்போது கொடிய காலன் அவன் நம் எல்லோரையும் கலங்க வைத்து, அவரது உயிரை 24-10-2005 அன்று சடுதியாய் கவர்ந்திட்டானே.

அன்னாரின் ஆன்மா பேரின்பப் பெருவாழ்வில் திளைக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

## தேற்றம்

இன்னவா றெம் வாழ்வு இன்னவா றெம் மறைவு என்பதெல்லாம்
அன்று பிரமா எழுதிய படியே ஆதல் திண்ணம்
என்னதான் கூறினென் விதியினை வெல்லல் எவர்க்கும் ஆகா
சென்ற உயிர்கள் நற்கதி பெறற்கான தேர்ந்து செய்மின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுவின் மகிமை

பசுவின் உடலில் சகல தேவர்களும் சாந்நித்யம் பெற்றிருக்கிறார்கள் என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

| | | |
|---|---|---|
| பசுவின் வலது கொம்பில் | — | கங்கை |
| பசுவின் இடது கொம்பில் | — | யமுனை |
| பசுவின் மத்திய பகுதியில் | — | சரஸ்வதி |
| பசுவின் முன் காலில் | — | பிரம்மன் |
| பசுவின் பின் காலில் | — | உருத்திரன் |
| பசுவின் குளம்புகளில் | — | தேவர்கள் |

பசுவை வலம் வருதல் பூமியை வலம் வருதலுக்கு ஒப்பானது. திருவானைக் கோயிலில் உச்சிக்காலப் பூசையில் கோபூசை சிறப்பிடம் பெறுகிறது.

## முத்தி தரும் பகுதிகள்

| | | |
|---|---|---|
| பிறக்க முத்தி | — | திருவாரூர் |
| இறக்க முத்தி | — | காசி |
| நினைக்க முத்தி | — | திருவண்ணாமலை |
| தீர்த்தமாட முத்தி | — | வேதாரணியம் |
| கூற முத்தி | — | ஆலவாய் |
| கேட்க முத்தி | — | அவிநாசி |

## உறவுகள் மேம்பட

1. நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை அகற்று.
2. எந்த விடயமானாலும் நாசுக்காக கையாளுங்கள்.
3. சில நேரம் சில விடயங்களை சகித்துத்தான் ஆக வேண்டும்.
4. நீங்கள் சொல்வதே சரி செய்ததே சரி என்று வாதாடாதீர்கள்.
5. அளவுக்கு அதிகமாய் தேவைக்கு அதிகமாய் ஆசைப்படாதே.
6. கேள்விப்படும் எல்லா விடயத்தையும் நம்பாதே.
7. உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாக இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
8. எவருக்கும் கொடுக்கும் மரியாதையைக் கொடுத்து இனிமையாக இன்சொல் பேசுங்கள்.
9. புன்முறுவல் செய்யவும், ஆறுதல் வார்த்தை சொல்லவும் தயங்காதீர்கள்.
10. பேசக் கூடாத இடத்தில் அமைதியைக் கடைப்பிடியுங்கள்.
11. எவருக்கும் நன்றி சொல்ல மறவாதீர்கள்.

நன்றி நன்றி நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

கட்டியணைக்கும் பெண்டிரும் மக்களும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போல் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டிமுழக்கி அழுவார் மயானம் குறுகி அப்பால்
எட்டி அடிவைப்பாரோ? இறைவா! கச்சி ஏகம்பனே

ஐயும் தொடர்ந்து விழியும்செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன் யான்
செய்யும் திருவொற்றியூர் உடையீர் திருநீறுமிட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்து ஓதவும் கற்பியுமே

ஊருஞ்சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்
சீருஞ்சதமல்ல செல்வம் சதமல்ல தேசத்தில்
யாருஞ்சதமல்ல நின்தாள்சதம் கச்சி ஏகம்பனே


பத்தும்புகுந்து பிறந்துவளர்ந்து பட்டாடைசுற்றி
முத்தும்பவளமும் பூண்டுஓடி ஆடிமுடித்தபின்பு
செத்துக்கிடக்கும் பிணத்தருகே இனிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்னகாண் கரியிலாபுரிக் காளத்தியே!

பிறந்தபொழுது கொண்டுவந்த தில்லைப் பிறந்துமண்மேல்
இறக்கும்பொழுது கொண்டு போவதில்லை — இடைநடுவில்
குவிக்குமிச் செல்வம் சிவன்தந்ததென்று கொடுக்கறியாது
இறக்கும் குலாயருக் கென்சொல்வேன்கச்சி ஏகம்பனே.

முடி சார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடி சாம்ப ராய்வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்த
படி சார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னம்பலவர்
அடி சார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே அறிவாரில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலுப்பிள்ளை நடராசா அவர்களின் வம்ச விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

—திருக்குறள்

எம்மை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்தி அழியா செல்வம் ஆகிவிட்ட எமது குடும்பத் தலைவனை நாம் இழந்து நிற்கையில், அவரின் மறைவை அறிந்து உடனே நேரில் வந்து தக்க நேரத்தில் உதவிகள் பல புரிந்த உற்ற நண்பர்கள், நேரிலும், தொடர்பு சாதனங்கள் மூலமும் துக்கத்தில் பங்கு கொண்ட உறவினர்கள், நண்பர்கள், எமது துன்பத்திற்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்து, ஆறுதல் கூறியவர்கள், அன்புத் தெய்வத்திற்கு உதவிய வைத்திய அதிகாரிகள், தாதிமார்கள், மலர்வளையங்கள் அனுப்பியவர்கள், அஞ்சலி, நினைவு மலர்கள் அச்சிட்டு வெளி யிட்டவர்கள், இறுதிக் கிரியைக்கு வேண்டிய அனைத்து உதவிகள் புரிந்தவர்களுக்கும், நலம்பட நடத்திய குருக்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகள்.

இங்ஙனம்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப் பிள்ளைகள்.

தற்போதைய முகவரி:
KIRCH STR - 1
29439 LÜCHOW
GERMANY

தாயக முகவரி:
ஏழாலை வடக்கு
ஏழாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் –

ஐயா! நான்
4 வருடமாய்ப் படிக்கிறும் புண்ணிய மாணவர்க் கின்றேர்
உன்னுடைய பொன்னான்ற வருவாரிருக்க
வரம் தா வேண்டும்
நான் எந்த பரிகாரமும் மாணவர்க்கு
தினம் படிப்பதற்கு நீங்கள் உதவி செய்ய
வேண்டும்!

இப்படிக்கு
இ. நடராஜா.
ஸ்ரீ விநாயகர்
ஜோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org